Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year *2012-2013* in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012-2013, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012-2013 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012-2013 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 10-5-2022 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2012-2013 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2012-2013 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	1,64,96,993	..	..
48	போக்குவரத்துத் துறை	..	39,626	..
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	33,77,10,952	..	..
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	697,86,80,823	..	..
	பெருமொத்தம்	**733,28,88,768**	**39,626**	..

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013-2014, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013-2014 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து 5-5-2022 ஆம் நாளன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2013-2014 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013-2014, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013-2014 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.